https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# புனைகதைகளில் மரபுத்தொடர்கள்

**மி. ஜெயின் கிறிஸ்டி**
தமிழ்த்துறை
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன்**
பேராசிரியர் & நெறியாளர்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
பல்லாவரம், சென்னை – 600117

*முன்னுரை*

*உரைநடை வளர்ச்சியால் தற்கால இலக்கிய வகை பலவகையாகப் பரிணமித்திருக்கின்றன. கவிதை, கதை, நாவல் போன்றவற்றில் யதார்த்த உலகம் சார்ந்த ஒரு புனை உலகம் படைக்கப்படுகிறது. இவ்வுலகத்தின் உணர்வுகளைப் புலப்படுத்த செறிவான கூர்மையான மொழிநடை தேவைப்படுகிறது. இத்தேவையை நிறைவு செய்யும் வகையில் மரபுத்தொடர்கள் கருத்துச் செறிவையும் உணர்வுக் கூர்மையையும் வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன.*

*பெரும்பாலும் செய்யுள் நடையிலேயே இலக்கியங்கள் படைக்கப்பட்ட காலம் மறைந்து விட்டது. தற்போது உரைநடை இலக்கியங்கள் காலத்தின் கட்டாயமாகிவிட்டன. சிறுகதை, புதினம், நாடகம் ஆகிய அனைத்தும் உரைநடையாகவே அமைந்துள்ளன. இவ்விலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் சாமான்ய மனிதர்கள் அவர்களை அவர்கள் பேசும் மொழியில்தான் அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. எனவே, இலக்கியங்களில் பேச்சுநடை தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதனால் படைப்பிலக்கியங்களில் மரபுத்தொடர்களின் பயன்பாடு அதிகமாக உள்ளதைக் காணமுடிகிறது.*

*புனைகதைகளின் கதாபாத்திரங்கள் சூழலுக்கு ஏற்றவாறு தன் மீது தோன்றும் எண்ணங்களையும் சிந்தனைகளையும் உவமைகளாக, பழமொழிகளாக, மரபுதொடர்களாகப் பயன்படுத்துவதைக் காண முடிகிறது. இத்தகைய புனைகதைகளில் வெளிப்படும் மரபுத்தொடர்களை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

*புனைகதைகளின் வரலாற்றில் தமிழின் இரண்டாவது நாவலாசிரியராகக் கூறப்படும் மாதவைய்யா அவர்களின் முத்துமீனாட்சி நாவலில் வாய்மொழிகதை மரபின் வழிவந்த நவீனங்களையும், அழகியலையும் இக்கதையில் காணமுடிகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *மரபுத்தொடர், புனைகதைகள், கரிசல் இலக்கியம், குறிப்புப்பொருள், வாய்மொழி இலக்கியம்.*

## *மரபுத்தொடர்*

*பழமொழிகள் உவமைகள் உருவங்கள் தொடர்கள், மரபுத்தொடர்கள் போன்றவை ஒரு மொழியின் ஆயத்தத் தொடர்களாகக் கருதப்படும் சூழ்நிலைக்கு ஏற்ப அவற்றை எடுத்துப் பொருத்திக் கையாளலாம். அந்த வகையில் ஆயத்தத்தொடர்களுள் மரபுத்தொடரே ஆய்வுப்*

பொருளாகக் கொள்ளப்படுகிறது.

வாய்மொழி இலக்கியங்கள் பேச்சுவழக்கில் நேர்பொருளை எடுத்து, குறிப்புப் பொருளை அல்லது மறைபொருளை உணர்த்தி நிற்கின்றன. தான் சொல்ல விரும்பும் கருத்தைச்சரியாகக் குறிப்பாகச் சொல்வதற்கு மரபுத்தொடர் துணை செய்கின்றன.

### மாதவைய்யா முத்துமீனாட்சி (1898)

மாதவைய்யா முத்துமீனாட்சி, தமிழ் நாவல் வரலாற்றில் சிறப்புற்ற இரண்டாவது நாவலாகப் போற்றப்பட கூடியது. தமிழின் முதல் சமூக நாவலும் சமூக சீர்திருத்த நாவலும் இதுவே எனலாம். முத்துமீனாட்சி போன்ற கன்னி கழிந்த விதவைகளின் விவாதம் பற்றி தைரியமாக மாதவைய்யா பேசுகிறார். மேலும் விதவை மறுமணத்தை ஆதரித்து எழுதப்பட்ட அக்கால இந்திய நாவல்களின் முக்கியமான நாவல் முத்துமீனாட்சி.

### கதாபாத்திரங்களின் மூலம் வெளிப்படும் மரபுத்தொடர்கள்

முத்துமீனாட்சியின் சித்தி குட்டியம்மாள் கோபமாகப் பேசும் பொழுது **"வயிற்றை நிரப்பிக்கொண்டு மண்ணுருப் போல் நிற்கின்றாயே!",** "சும்மா கள்ளக்காளை போல் திரிய நினைக்கிறாயோ! என்று முத்து மீனாட்சியைத் திட்டுகிறாள்"[1]. சாப்பிட்டு விட்டுச் சும்மா அங்கு மிங்கும் நடப்பதை இத்தகைய உவமையால் கூறப்படுகிறது. குட்டியம்மாளின் தாயைக் கூறும் பொழுது தாய் ஒரு **கொடிய நீலி"**[2] என்று கூறுகிறாள். **'நீலி'** என்பது பொய்யாகக் கண்ணீர் வடிக்கும் தன்மைக் கொண்டவள் எனப் பொருள் படுகிறது.

சாந்த குணத்தைச் சொல்லும் பொழுது **'பூனையைக் கண்ட எலி போல்'** நடப்பர்"[3] எனப் பொருள்படுகிறது. "மாட்டுக்குப் புல்லறக்கக் கூட உதவமாட்டான்"[4] எதுவும் தெரியாத நிலையைக் கூறப் பயன்படுகிறது. "கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை' படித்த பெண்" ஒன்றுமில்லாத வீட்டிற்குத் திருமணம் முடித்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் **"கிழட்டுபிணத்தைக் கட்டியழவும் வேண்டாம்' அடப்படவும் வேண்டாம்"**[5] ஒன்றும் இல்லாத தன்மையைக் கூறுவது போல் அமைந்துள்ளது.

### சூழ்நிலை, மரபுத்தொடர்கள்

"பாறையின் போரில் நெல்விளையுமோ? உழும் உரமிடப்பட்ட நிலமன்றோ வேண்டும்"[6] என்று கூறப்படுவது, நல்ல நிலத்தில் தான் நெல் விளையும் அதுபோலப் படித்தால் தானே நல்ல அறிவு கிடைக்கும் என்று கூறுகிறார்.

"முத்துமீனாட்சியின் கல்யாணம் நிறைவேறிய வுடன் சூட்டோடு சூடாய் மணியருக்கும் கலியாணம் செய்து விடவேண்டும் என்று என் அத்தை **"பிரயத்தனம்"**[7] செய்தாள் என்று கூறப்படுகிறது". **பிரயத்தனம்** என்பது விடாமுயற்சியைக் குறிக்கிறது தொடர்ந்து ஒரு செயலைச் செய்துவிட வேண்டும் என்ற மரபுத்தொடரைக் குறிக்கிறது.

"செத்தமாடு போல் ஊதிப்பருத்துவிட்டது", "முத்து சிப்பி போலிருந்தாள்" என்று வார்த்தை கூறப்படும் பொழுது அவளின் அவலநிலையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

"அனாதையாக இருந்த எனக்கு" ஒரு **"கொழுகொம்பு"**[8] போலிருந்தாள், என்று முத்துமீனாட்சி தன் அத்தையைப் பற்றி கூறுகிறாள்.

கொடி ஏறிப்படர்வதற்கு நடப்படும் கொம்பு போல உறுதுணையாக இருந்தாள் என்பது கூறப்படுகிறது.

"பொண்டாட்டி கால் பட்டால் குற்றம் கை பட்டால் குற்றம் என்றார்" போல் இன்னும் அநேக முகாந்தரங்களைக் கொண்டு ஓயாமல் சச்சரவு செய்தாள்.

நான் கோலிழந்த குருடனைப் போல் ஆகிவிட்டேன் என்று முத்துமீனாட்சி தன் இயலாமையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

"பாழுக்கு இறைத்தது போலத் தன் பணம் எல்லாம் வீண்போயிற்று"[9] என்று முத்து மீனாட்சியின் மாமியார் அலுத்துக் கொள்கிறாள்.

பிள்ளைப்பூச்சியை விழுங்கச் சொன்னால் பிள்ளைப்பூச்சியை உண்டால் குழந்தை வளரும் என்பது ஐதீகம்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தோன்றிய தமிழ் நாவல் வரலாற்றின் ஆரம்பகால வாய்மொழிச்சொல், கதை மரபையும் மேலைநாட்டு நவீன இலக்கிய தாக்கத்தையும் சமூக சீர்திருத்த விமர்சனங் களையும் பிரச்சார நோக்கத்தையும் கருத்தாக கொண்டு வளர்ந்த புதினங்கள் உவமைகளையும், பழமொழிகளையும், மரபுத் தொடர்களையும் கதைப்போக்கில் யதார்த்த

மாந்தர்களின் வாய்மொழிப் பேச்சுகள் சாடையாக வலம் வருவதைக் காணமுடிகிறது.

## புனைகதைகளில் கரிசல் வட்டார இலக்கியப் போக்கு

கரிசல் வட்டார புனைகதைகளில் மொழிப் பயன்பாடுப் பண்புகள் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கரிசல் இலக்கியம் என்பது இலக்கிய வகைப்பாட்டில் மண் சார்ந்த பொருண்மைகளாகக் குறிப்பிடுகிறது. மக்கள் தான் வாழும் நிலப்பரப்பில் வாழ் வாதாரங்களுக்காக உற்பத்தி பண்ணுகின்ற உணவு, வாழ்விடம், அமைப்பு, பிற உயரினங்களோடு கொண்ட உறவு, மொழி என்ற கருத்தியல் கட்டமைப்புகள் மண்சார்ந்த இலக்கியமாக அமைகின்றன. இத்தகைய இலக்கியங்களை வடிவமைப்பதில் கி.ராஜநாராயணன்,மேலாண்மை பொன்னுச் சாமி, கு.அழகிரிசாமி, இமையம் மற்றும் சோ. தர்மன் ஆகியோரின் படைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

### சொற்பயன்பாடு

வட்டார வழக்குச் சொற்களில் மக்களின் இயல்பான பேச்சுக்களில் காணப்படும் பொருளற்ற சொற்களும் விரிவாகக் காணப் படுகின்றன.

### சான்றாக

***மசக்கம், கிசக்கம் வந்துராம பாத்துக்கோ,*** பதறி துடித்த மனிதர்கள் **"அல்லோல கல்லோலப்"**[10] பட்டனர் என்றும், **"நல்லது பொல்லாதுனு"** ஒரு வீட்டுக்குப் போனா நகையில்லாம நட்டுமில்லாம முண்டச்சி மாதிரிதான் வெறுமனையா நிக்க வேண்டியிருக்கு என்றும்.

அலையக் குலையப் பெரு வாய்க்காலுக்குள் ஓடினான் என்றும் பொருளற்ற சொற்கள் வருவதன் மூலம் புரியும் அளவிற்குச் சிக்கல் இல்லாத தெள்ளிய நடையாக அமைந்துள்ளது.

### உவமைகள்

கரிசல் நிலா சிறுகதைகளில் பற்பல இடங்களில் உவமைகள் ஆட்சி பெற்றுள்ளன. இவ்வுவமைகள் கதை அமைப்புக்கு நெருங்கிய தொடர்பு உடையதாகவும் கதை செய்திகளை விளக்குவதாகவும் இனிய தன்மையுடையதாகவும் காணப்படுகின்றன.

### சான்றாக

***"தியாகம் கதையில் நெத்தியைப்பார் சுடுகாடு மாதிரி வச்சுக்கிட்டு",*** "பொட்டை கண்ணுதான் போட்டிக்கு என்பதையும்", "உடைந்த இசைத்தட்டுப் போல நாராயணாய ஓயாமல் உல்லாச குரலில் கத்தினாள்" என்றும் அரும்பு என்னும் கதையில் **"இழவு வீட்டுச் சங்காக அலறுகிறது "தீப்பெட்டியாபிஸ் பஸ்ஸின் ஹாரன்"**[11] என்றும் உவமைகள் இடம்பெற்றுள்ளன. மேலாண்மை பொன்னுசாமி, கி. ராஜநாராய ணன் கதைகளில் வரும் உவமைகள் கதா பாத்திரங்களின் நிலைமைக்கு ஏற்றாற்போல் அமைந்துள்ளன பொதுவாகப் படைப்பிலக்கி யங்களால் உவமை ஆட்சி பெறுவது கருத்துச் சுருக்கத்தினைத் தெளிவுப்படுத்தவும் வாசகன் நினைந்து நினைந்து மகிழவும் துணை செய்கிறது.

### மேலாண்மைபொன்னுசாமி-மரபுத்தொடர்கள் (1951-2017)

விருதுநகர் மாவட்டம் மேலாண்மறைநாடு கிராமத்தில் பிறந்தார். பல்வேறு இலக்கியப் பத்திரிகையில் மட்டுமின்றி ஜனரஞ்சக பத்திரிக்கையிலும் வெளியான மின்சாரப்பூ என்ற கதை நாவலிருந்து. கரிசல் இலக்கியங்களில் பேச்சு வழக்கில் அமைந்தி ருக்கும் மரபுத்தொடர்கள் கதாபாத்திரங் களின் வழி அவர்களின் செயல்பாட்டை வெளிக்காட்டுகிறது.

### மின்சாரப்பூ

அடிவயிற்றில் அடித்தல் போல ***பீதியும் தினலும்*** அவருக்குள் சுழன்று வந்து அடைத்து கொள்ளுகிற பயம்.

**"வம்பு தும்புகளில்"**[12] ஈடுபடாமல் இருப்பவன் இவன்.

கோபத்தில் "**முறுக்கேறினா**" அவன் அம்மா விட மாட்டாள்.

இவனோடே ஒரே "**இழுபறியாக**"[13] இருக்கிறது - சச்சரவாக இருக்கிறதைச் சுட்டிக்காட்டப் படுகிறது.

**"சட்டி பொட்டிகளில்"** போட்டு வைத்திருந்த ரூபாய்களை நோட்டுக்களை எடுத்தாள் விஜயம்.

தெருக்குத் தெரு ஒரே **"வாய்ச்சத்தம்"**[14] தான் தெருக்குத் தெரு நடக்கும் வாய்ச்சண்டை இவ்வாறு கூறப்படுகிறது.

வீட்டுக்குள்ளே கிடக்குற பொட்டை நாய்க்கெல்லாம் இந்த வைத்தெரிச்சலா,

அவன் ஒரு **அப்புராணி பய.**

**“அறுக்கப்போகிற ஆடுபோல தவித்தான்.**

அடுத்தவர் மீது குற்றம் சாட்டுதலை **“விரல் நீட்டுதல்”**[15] என்று பேச்சு வழக்கில் மரபுத்தொடராகக் கூறப்படுகிறது.

**கடைக்கண் பார்வை** - ஆளின் மனசை அசைக்கிற மாதிரியான பார்வை.

**“கும்பிடப் போன தெய்வம் எதிரில் வர மாதிரி தயாரா நிக்கிற”**

**“சூறாவளி சூழலுக்குள் சிக்கித் தவிக்கும் துரும்பாக இவள்"**

**"ஓநாய் தலை மாதிரி முன்னாடி நிக்கிற"**

போன்ற மரபுத்தொடர்கள் மக்களின் உணர்வு களைச் சூழலுக்கேற்றவாறு மாற்றியமைக்கும் பண்பினைக் கொண்டதாக அமைந்துள்ளன.

தாட்சண்யம் பார்க்காமல் **தாறுமாற கத்துவாரு.**

பின்னடையில் யாருமில்லாமல் **காற்றாடுகிறது.**

**கசப்பு வெறுப்புமாகக்** கடித்துக் குதறுகிறார்.

**ஒரே தள்ளுமுள்ளு”**[16] சண்டைக்காடு

என்ன செய்ய எது செய்ய என்று ஒரே **முழிப்பட்டம்.** முழிபிதுங்குதலைக் கூறுகிறது.

தெருவில் நாயக்கார நிற்கவும் **தடபுடா** என்று எழுந்தான்

**உள்ளங்கை வியர்த்தது போல, “கண்முழி பிதுங்குதல், கை நீட்டுதல்”**[17] போன்ற மரபுத்தொடர்கள் மக்கள் பேச்சு வழக்காகக் கையாண்டுள்ளதை அறிய முடிகிறது.

**‘மனத்தெறிப்பு’ ‘மன நமைச்சல்’**

போன்றவை கோபமுற்று மனதில் வெறுப்பும் கசப்பும் உள்ளதைக் காட்ட இத்தகைய மரபுத்தொடர்கள் கையாளப்படுகின்றன.

**“ஐஸ் வைத்தல்”**

“ஏழரைச் சனியனை ஏறிக்கிட விட்டேன்ல”

“சட்டென்று நிமிர்ந்து பார்க்கிறே” **கண் சாடையைக்** குறிக்கிறது.

“கரையான் புற்று போல் - அரிக்கிறத் தன்மையைக் கொண்டதாக உள்ளது

“கண்ணில் **நீர்தளும்பல்”** - கவலையின் உச்சத்தை இத்தொடரால் கூறப்படுகிறது.

**“முரட்டுப்பிடி”** - விடாப்பிடியாக ஒரு காரியத்தை எடுத்து செய்வதாக அமைந்துள்ளது.

**துடிப்பு வெடிப்புமாக** வெளிவருகிற வார்த்தைகள்.

போன்ற மரபுத்தொடர்கள் வாழ்வின் எதார்த்தங்களைப் பேசப் பயன்படும் வாய்மொழியாகக் கருதப்படுகிறது.

**சூரிய வேர்வை - மேலாண்மை பொன்னுசாமி**

**“நூலிழையில்** துடிக்கிறது இதயத்தின் சகலநரம்புகள் - உணர்வுகளின் வெளிப் பாட்டைக் குறிக்கும் வண்ணமாக அமைந்து ள்ளது.

“அவன் புகழ் **கொடி கட்டிப்பறக்க”**

மகளோட நரம்புகளை அறுத்துக் கயிறாக முடிச்சுப் போட்ட கொடுமை.

**ஊர்மண் – மேலாண்மை பொன்னுசாமி**

**ஆபத்தைக் கண்ட குடல் மாதிரி** தெறிக்க ஓடுகிறான்.

மண்டையில் **“பொறி தட்டியது”**[18]

**தட்டிப்பறித்தல்** அவனுக்கு "மூக்கணாங்கயிறு" போட வேண்டியதுதான்.

**"பசி பொறுக்காத பாம்பு தன் வாலைப் பற்றி விழுங்கிற மாதிரி"**

பசியின் கொடூரம் இங்குக் கூறப்படுகிறது.

மக்களின் நிலைமை நெருப்பு மாதிரி காணப்படுகிறது போன்றவை கதாபாத்திரங் கள் தன் உணர்வை காட்டும் வகையில் அமைந்துள்ளது.

போன காரியம் **காயா பழமா?**

**பாம்பு கீம்பு கடிச்சிராம காப்பாத்துனீங்க**

**“தட்டிப்பறித்தல்”**[19] இன்பம் தான்

பதற்றமும் பகைப்புமாக மண்டி போட்டு மகனை தழுவியணைத்துக் கொண்டு துடித்தணைத்தான்.

**பச்சைக் குஞ்சுக்குப் பறக்க கற்றுக் கொடுக்கிற மாதிரி**

**“கைநீட்டுதல், தீப்பொறியாகத்** தெறித்தல்”[20]

ஈரக்குலை நடுங்க ஓடி வந்தாள்

கைமாற்று கால்மாற்றுக்குத் தலையைச் சொறிந்தாள்

பணத் தேவைக்காக மற்றவர்களிடம் இரந்து கேட்டலை இத்தகைய மரபுத்தொடர் குறிக்கிறது.

**“தாய் தவுட்டுக்கு அலைஞ்சாளாம்**

**புள்ளை இஞ்சிப் பச்சடிக்கு அழுதானாம்”**

போன்ற தொடர்கள் சொலவடைகளாகப் பயன்படுவதை அறியமுடிகிறது.

மரபுத்தொடர்கள் போல் உவமைகளும் பழமொழிகளும் நேரடிப் பொருளைத் தராமல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மறைப் பொருளை வெளிப்படுத்தும் தன்மையுடை யதாகப் புதினங்களில் காணமுடிகிறது.

### கி. ராஜநாராயணன் - கோபால்லபுரத்து கிராமம்

கட்டபொம்மன் காலத்திற்கு முன்பு தெலுங்கு தேசத்திலிருந்து வந்து குடியேறிய ஒரு சமூகத்தின் வரலாற்றை நாடோடி கதை மரபும் புராணக்கதை இயல்பும் கலந்து 137 வயது தாயார் அம்மாள் உட்பட்ட மூன்று தலை முறைகளைச் சேர்ந்த பாத்திரங்களை உருவாக்கி வியப்பும் விரோதமும் நிறைந்த பழங்கால நாவலாகப் படைத்துள்ளார் கி.ராஜநாராயணன்

இவரின் படைப்புகள் யதார்த்த மக்களின் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுகின்றன. அவை கதைகளுக்கு ஒரு தனித்துவமான அழகையும் ஆழத்தையும் சேர்க்கின்றன. மடியிலே கட்டிக்கொண்டு - பொருளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதைக் குறிக்கிறது. தலையெடுத்த காலம் மோசமான சூழ் நிலையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**“ஊரை அடிச்சு உலையிலே போரடவன்”**[21]

கொடிய செயலைச் செய்யும் ஒருவரைக் குறிக்கிறது.

**“ஊரைக் கூட்டிப் படையெடுக்கலாம்”** என்பது ஒரு பெரிய சண்டையோ பிரச்சனையோ தொடங்கப் போவதைக் குறிப்பதாக உள்ளது.

துண்டை உதறித் **தோளில் போடுதல்**

இது ஒரு வேலையைத் தயங்காமல் செய்வதையோ அல்லது ஒரு வேலையை முடித்துவிட்டேன் என்று சொல்வதையோ குறிக்கும்.

**“பொன் போட்டால் பொன்னை எடுக்கலாம்”**

ஒரு செயலைச் செய்யும் போது அதற்கான பலன்கிடைக்கும் என்பதைக் குறிக்கும். மக்களின் பேச்சுமொழிகளும் செயல்பாடுகள் தொடர்பான விவாதங்களும் கலாச்சாரப் பண்பாட்டை மேலோங்கிக் காட்டுகின்றன.

### கி.ராஜநாராயணன் - கோபல்லபுரத்து மக்கள்

கி.ராஜநாராயணன் கதைகளில் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியல் மொழி. பழக்கவழக்கங்களில் நாட்டுப்புறக் கதைகள், சொலவடைகள், சடங்குகள் என அதிக அளவில் காணப்படுகின்றன.

கரிசல் வட்டார வழக்குச் சொற்களும் மரபுத்தொடர்களும், உவமைகளும் அதிகம் காணப்படுகின்றன.

**சான்றாக...**

"உட்கார்ந்து தூங்கும் **கோழித் தூக்கங்கள்** தான்"[22]

**கோழித்தூக்கம் - சிறிய தூக்கம்**

நெல்மணி வாய்கீறியது போல.

"முன்னேற முடியாத ஆலங்கட்டி மழை போல்"

**“சுமைதாங்கி போல, விஸ்வரூபம் எடுத்தது போல”**

“தவித்துக் கொண்டிருக்கும் மனசு போல”

**கருப்பட்டி கசிஞ்ச** மாதிரி இருந்தா எத்தனை நாளைக்கு அது நிலைக்கும்.

“ஒன்றை பத்தாக்க சங்கை ஊதி பற்ற வைத்ததுபோல”

உன் "கடைக்கண் பார்வை"

**"அறுக்கப்போகிற ஆடுபோல"**[23] தவித்தாள்.

ஒன்றும் செய்வதறியாது திகைத்தல் போல்.

### கு. அழகிரிசாமி

கு.அழகிரிசாமியின் சிறுகதைகளில் வரும் உரையாடலில் பற்பல இடங்களில் மரபுத் தொடர்களையும் கையாண்டுள்ளார். சான்றாக, **சபையிலே கறியைப் பூசிட்டான்,** இது கை சேர்றகாரியம்மில்லே. ராமரை ஏமாத்துன மாயமான் போல், முடிவுக்கு **கை கழுவியாச்சு** என்றும், என்ன ஆனாலும் சரி இந்த **தண்ணிச் சனியனைக் கையிலே தொடவே கூடாது** என்றும், பல மரபுத்தொடர்கள் இடம் பெற்று வருவதைக் காணமுடிகிறது.

### சோ. தர்மன்

தமிழ் படைப்பிலக்கியங்களில் நாவல் என்றால் இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வடிவத்தை மாற்றி கரிசல் இலக்கியங்களில் மக்கள் பேசும் பேச்சு வழக்கில் தூர்வை என்னும் நாவலை

எழுதியுள்ளார். தூர்வை, கூகை, சூல் போன்றவை இவர் எழுதிய படைப்பிலக்கியங்களில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவரது படைப்பிலக்கியங்கள் மக்கள் வாய்மொழிக்கும் கதை இலக்கியத்துக்கும் மிகுந்த தொடர்டையதாக படைக்கப் பட்டுள்ளன. சுதந்திரமான ஒரு புகைப்படக் காரன் அவன் பார்த்து வியந்த அனுபவித்த ரசமான காட்சிகளைப் பதிவு செய்து வைப்பது போலவே படைப்பாளனும் கதை வடிவங்களைப் பல வகைகளில் பதிவு செய்கிறான். எழுத்தாளர் சோ.தர்மன் அவர்களும் தாம் பிறந்து வாழ்ந்த உருளைக்குடி கிராமத்துக் காட்சிகளைத் தனது எழுத்தால் பதிவு செய்கிறார். இத்தகைய நாவல்களில் பேசப்படும் பேச்சு வழக்கானது மக்களின் உணர்வுகளையும் மனக் குமுறல்களையும் பழமொழியாக உவமைகளாக, மரபுத் தொடர்களாக வெளிவருவதைக் காண முடிகிறது.

### சூல் - மரபுத்தொடர்

“ஒன்னைய மாதிரி **செக்கடிக்கிற பய மாதிரி**

**சட்டுபுட்டுனு** துட்டைக் கேட்டோமா வந்தோமான்னு இருக்கனும்.

இன்னும் ஒரு **கோளாறு** சொல்றன் கேட்டுக்கோ, ஆற அமரச் சாப்பிடுறது

இதுக்குமேல "கீச்பூச்சனா" வெள்ளையும் சொள்ளையுமாய் **“பருந்தைக் கண்டு பதுங்கும் கோழிக் குஞ்சைப் போல்”**[24] பாயில் படுத்து முடங்கினான்.

### 'இமையம்' - 'கோவேறு கழுதைகள்'

'கோவேறு கழுதைகள்' என்ற புதினத்தில் ஆசிரியர் 'இமையம்' அவர்கள் கிராமிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாத்திரங்களாகப் படைத்துள்ளார். அவர்களுடைய பேச்சு மொழியில் எண்ணற்ற மரபுத்தொடர்கள் இடம் பெற்றுள்ளன. வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள மக்களின் பெரு மூச்சினை இம்மரபுத்தொடர்களில் உணர முடிகிறது. தினமும் ஊரில் உள்ள வீடுகளில் எல்லாம் முறை உணவு வாங்கிச் சாப்பிடும் வாழ்க்கை அவர்களுடையது. வேலை வாங்கிக் கொள்ளும் ஊர் மக்கள் உணவு வழங்கும் போது மனதார உணவு வழங்காமல் இருப்பதை,

*"என்னாங்க சாமி இது? கையக் கையக் காட்டுறீங்க?"*

*"பின்ன என்ன.....குண்டானோட அப்படித்* **தூக்கிக் கொட்டச் சொல்லுறியா?"**[25] என்ற பகுதியில் வெறும் கையை நீட்டும் ஆதிக்க சாதியினரின் மனப்பாங்கு தோலுரித்துக் காட்டப்படுகிறது.

### முடிவுரை

புனைகதைகளில் உரையாடல் வடிவிலிருந்து பேச்சு வழக்கில், வாய்மொழிச்சொற்களாக, உவமையாக, பழமொழியாக மரபுத்தொடர் களாகத் தொடர்கள் பயன்பட்டு வருவதைக் காணமுடிகிறது. தற்காலத் தமிழ் புனைக்கதை வடிவங்களில் மொழியின் புரிதல் உணர்வும் நெகிழ்வுத் தன்மையும் மரபுத்தொடர்களால் கூடுகின்றன. கரிசல் இலக்கிய வாய்மொழி உச்சரிப்பில் தவிர்க்க வியலாத வகையில் மரபுத்தொடர்கள் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. சூழ்நிலைக்கேற்ப வரும் கிராமத்து வாழ்வியல் புரிதலுடன் மரபுத் தொடர்கள் பின்னிப்பிணைந்து இருப்பதை இவ்வாய்வில் அறிந்துகொள்ள முடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. அ.மாதவையா-முத்து மீனாட்சி-பக்-28
2. மேலது பக்கம்-29
3. மேலது பக்கம்-29
4. மேலது பக்கம்-31
5. மேலது பக்கம்-32
6. மேலது பக்கம்-39
7. மேலது பக்கம்-55
8. மேலது பக்கம்-66
9. மேலது பக்கம்-69
10. ஜெயப்பிரகாசம்.பி-சிறுகதைகளில் காட்டும் கரிசல் காட்டு மக்களின் வாழ்வியல் - Retrieved by-08 -2020
11. மேலது பக்கம்-72
12. மேலாண்மைபொன்னுச்சாமிமின்சாரப்பூ-பக்-22
13. மேலது பக்கம்-பக்-29
14. மேலது பக்கம்-39
15. மேலது பக்கம்-60
16. மேலது பக்கம்-95
17. மேலாண்மை பொன்னுசாமி-சூர்ய வேர்வை-பக்-62
18. மேலாண்மை பொன்னுசாமி - ஊர் மண்-பக்-40
19. மேலது பக்கம் - 53
20. மேலது பக்கம் - 58
21. கி. ராஜநாராயணன்-கோபாலபுரத்து கிராமம்-பக்-13
22. கி. ராஜ நாராயணன் - கோபாலபுரத்து கிராமம்-பக்-72
23. மேலது பக்கம் - 101
24. சூல் - சோ.தர்மன்-பக்-52
25. இமையம் - கோவேறு கழுதைகள்-பக்-65